**வன்செயலால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களில் உள்ள சமுதாயத்தினரது சீவனோபாயத்திற்கான செயற்திட்டம் (மீளெழும்பல் செயற்திட்டம்) 2014**

வன்செயலால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்கிளல் உள்ள சமுதாயத்தினரது சீவனோபாயத்திற்கான செயற்திட்டத்தின் (மீளெழுப்பல் செயற்திட்டம்) 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குமிடையேயான 2004 ஜுலை 23 ஆந் திகதிய 3935 சீஈ இலக்கமுடைய அபிவிருத்திக் கடனுதவி உடன்படிக்கையின் IV ஆம் உறுப்பிரையினது 4.01(ஆ)(i) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து, இச்செயற்திட்டத்திற்கு மேலதிக நிதியை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குமிடையே 2010 ஜனவரி 11 ஆந் திகதிய 4671 எல்கே எனும் இரண்டாவது நிதியளிப்பு உடன்படிக்கையும் 2011 நவெம்பர் 29 ஆந் திகதிய 4956 எல்கே எனும் மூன்றாவது நிதியளிப்பு உடன்படிக்கையும் கைச்சாத்தாகின.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளிப்பு, மற்றும் காலம்

செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தற்போதைய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சும் செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவர்களாகும். வன்செயலால் பாதிப்பதற்குள்ளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அதனை அண்மித்த பகுதிகளினதும் உள்ள சமுதாயத்தினருக்கு உதவுதல், அவர்களது கமத்தொழில் மற்றும் ஏனைய உற்பத்திகளையும் வருமானத்தையும் அதிகரித்தல், நிலைத்து நிற்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதார ஆற்றலைக் கட்டியெழுப்புதல் என்பனவே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,844.42 மில்லியனுக்குச் சமமான 141.14 மில்லியன் அமெரிக்கக் டொலர்களாகும். இதில் 124.70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படவிருந்தது. இலங்கை அரசாங்கத்தினதும் செயற்திட்ட நலன்பெறுநர்களினதும் உதவுதொகை முறையே 13.72 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 2.72 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பனவாகும். 2014 டிசெம்பர் 31 இல் முடிவடையத்திட்டமிடப்பட்ட செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2004 ஜுலை 23 ஆந் திகதியன்று ஆரம்பித்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் செலவினம் செயற்திட்டத்தால் பேணப்படும் அதிகரித்த நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து

மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபாரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களை தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

நிதிசார் கூற்றுக்களில் 4956 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் காட்டப்பட்ட முறையே ரூபா 5,460,207,471 மற்றும் ரூபா 224,750,491 தொகையான சிவில் வேலைகள் மற்றும் மானியங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உப பதிவேடுகளில் உள்ள முறையே ரூபா 5,746,327,659 மற்றும் ரூபா 254,932,535 என்பவற்றுடன் இணங்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதிகச் செலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்ட நிதியேற்பாடு, மீளாய்வாண்டின் போதிலும் 2014 டிசெம்பர் 31 வரையிலுமான நிதிப் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | நிதியளிப்பு உடன்படிக்கைப் பிரகாரம் நிதியளிக்கப்படவுள்ள தொகை | | வரவு, செலவுத்திட்ட மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 வரை | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சஅச உடன்படிக்கை இலக்கம் | | | | | | | |
| 3935 | 64.70 | 8,217.44 | 480.00 | 3.63 | 476.10 | 57.96 | 7,593.96 |
| 4671 | 12.00 | 1,400.28 | 24.00 | 0.18 | 23.56 | 10.32 | 1,352.29 |
| 4956 | 48.00 | 5,582.70 | 976.00 | 7.45 | 975.89 | 43.60 | 5,711.97 |
| நலன்பெறுநர் | 13.72 | 1,372.00 | - | - | - | - | 153.55 |
| இலங்கை அரசாங்கம் | 2.72 | 272.00 | 131.00 | 1.00 | 131.19 | - | 1,606.22 |
| மொத்தம் | 141.14 | 16,844.42 | 1,611.00 | 12.26 | 1,606.74 | 111.88 | 16,417.99 |

வழக்கப்படி, செயற்திட்ட உறுப்புகளுக்கென நிதியளிப்பு உடன்படிக்கைகள் மூலம் ஒதுக்கப்பட்ட தொகையானது தொடர்ச்சியாக மாற்றத்திற்குள்ளாகின. 9 உறுப்புரைகளுக்கான ஒதுக்கீடு 9 முதல் 75 சதவீதம் அதிகரிக்கப்பட்டும் ஏனைய 3 உறுப்புகளுக்கான ஒதுக்கீடு 31 முதல் 83 சதவீதம் வரை குறைக்கப்பட்டுமிருந்தன. இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பின் கீழும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட பௌதிக நடவடிக்கைகளும் மாற்றமடைந்திருப்பதை இது சுட்டிக்காட்டியது. ஆகவே, செயற்திட்டக் கால முடிவில் நிதிசார் மற்றும் பௌதிக இலக்குகள் என்பன எய்தப்படுமா எனும் ஐயம் கணக்காய்வில் நிலவுகின்றது.

### 3.2 பௌதிக முன்னேற்றம்

பின்வரும் அதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது கிராமப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி உறுப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த நடவடிக்கைகளதும் 2014 டிசெம்பர் 31 வரை முடிவடைந்த நடவடிக்கைகளதும் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நடவடிக்கை | முடிவுறுத்த வேண்டிய நடவடிக்கைகளின் எண்ணிக்கை | | 2014 டிசெம்பர் 31 வரை முடிவடைந்த நடவடிக்கைகளது எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | முதலாவது நிதியளிப்பு உடன்படிக்கை | இரண்டாவது நிதியளிப்பு உடன்படிக்கை | முதலாவது நிதியளிப்பு உடன்படிக்கை | இரண்டாவது நிதியளிப்பு உடன்படிக்கை |
| இயலளவைக் கட்டியெழுப்புதல் | 119,973 | 30,787 | 75,284 | 25,765 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 2,411 | 1,023 | 2,363 | 1,070 |
| உப கடன்களும் சீவனோபாயத்திற்கான உதவியும் | 118,168 | 23,613 | 108,011 | 22,610 |

மேற்கொண்டும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி தகவல்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒவ்வொரு நடவடிக்கையினதும் பௌதிக முன்னேற்றம் இலக்கை அடையாது பின்னடைந்திருந்தமை புலானாயிற்று. இது தொடர்பாக விபரமளித்த செயற்திட்டப் பணிப்பாளர் இலக்குகள் ஊகத்தின் அடிப்படையில் அமைந்தவை ஆகும் என்றும் வியாபார முன்மொழிதலுக்கான சாத்தியக்கூறினுடாகவே உபகடன்கள் வழங்கப்படுவதன் பொருட்டு உள்ளவாறான நலன்பெறுநர்கள் தெரிவுசெய்யப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

(ii) செயற்திட்டத்தின் சமுதாய செயற்பாட்டுக் கைநூலின் பிரகாரம், நலன்பெறுநர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கிராமப் புனரமைப்புக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 10 சதவீதம், 50 சதவீதம், 40 சதவீதம் என முறையே ஆற்றலைக் கட்டியெழுப்புதற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் சீவனோபாய ஆதார நடவடிக்கைகளுக்கான உப கடன்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு வகையானவற்றிற்கும் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதி முறையே 6.24 சதவீதம், 30.41 சதவீதம், 63.36 சதவீதம் என்பனவாகும்.

(ஆ) செயற்திட்டம் மேற்கொண்ட கொத்தணி மட்ட சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்கிடப்பட்ட 114 நடவடிக்கைகளில் 69 நடவடிக்கைகள் மாத்திரமே அமுலாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 டிசெம்பர் 31 வரை இதற்கெனச் செலவாகிய தொகை ரூபா 258.03 மில்லியன் ஆகும். மேற்படி 69 நடவடிக்கைகளில் ரூபா 9.57 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட 10 நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. தொடர்புடைய சமுதாய நிறுவனங்களுடன் முறையான தொடர்பின்மையால் ரூபா 32.62 மில்லியன் செலவிட்டதன் பின்னரும் நலன்பெறுநர்களால் வேறு 28

நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படாதிருந்தது. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடும்ப பொருளாதார அதிகரிப்பு பொதியினது 19 நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிர்பார்த்த நலன் கிட்டவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டம் இது தொடர்பாக ரூபா 9.63 மில்லியனைச் செலவழித்திருந்தபோதும், கண்காணிப்பு, மேற்பார்வை என்பன இல்லாதிருந்தமையே இதற்கான காரணமாகும்.

(இ) கருப்புக் கடலை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைப் பயிரிடுவதிலும் அவற்றினது பெறுமதியை அதிகரிக்கச் செய்வதிலும் அதிகரித்த விழிப்புணர்வை அவர்களிடையே ஏற்படுத்துவதற்காக புத்தளம் மாவட்டத்தில் உள்ள கும்புக்வெவ கிராமத்தில் கருப்புக் கடலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைச் செயற்திட்டம் நடாத்தியது. ரூபா 5.4 மில்லியன் கிரயத்தில் களஞ்சிய வசதிகளுடனான கருப்புக் கடலை செய்முறை நிலையம் ஒன்றை செயற்திட்டம் நிர்மாணித்திருந்தபோதும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், விவசாயிகளைப் பதிவு செய்தல், கொள்வனவாளர்களுடன் முற்கூட்டியே விற்பனைக்கான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமையால், இச்செயற்திட்டத்தின் நோக்கம் ஈடேறவில்லை. மேலும், ரூபா 65,000 கிரயத்தில் 2012 பெப்ரவரி 24 அன்று கொள்வனவு செய்யப்பட்ட டிஹல்டர் இயந்திரம் கொள்வனவு நாள் முதலாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) அறுபது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக 2 கிராம அபிவிருத்தி நிறுவனங்களது பங்குபற்றலுடன் புத்தளம் மாவட்டத்தில் கைகளால் தயாரிக்கப்படும் சூழலுக்கு பங்கமில்லாத கடுதாசி உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நிறுவுவதற்குச் செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட ரூபா 11.90 மில்லியன் கிரயத்தில் இதற்கென ரூபா 6.14 மில்லினை வழங்குவதற்குச் செயற்திட்டம் உடன்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், நிதியளிப்பதில் தாமதம், உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல், சந்தை ஆராய்ச்சி இல்லாதிருந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் 2013 ஜனவரி மாதம் ஆரம்பமாகிய செயற்திட்டம் 2013 ஜூலை மாதம் முடிவடைந்திருந்தது.

(உ) செயற்திட்டத்தின் கீழ் 2014 டிசெம்பர் 31 வரை புனரமைக்கப்படவிருந்த 144 குளங்களில் 141 குளங்கள் மாத்திரமே அத்தினத்தில் உள்ளவாறு புனரமைக்கப்பட்டிருந்தன.

(ஊ) மேலும், சீவனோபாய நிலைநாட்டல் உறுப்பின் கீழ் நிர்மாணிக்கப்படவிருந்த 3,026 பொலிநெட் வீடுகளில் 1,229 மாத்திரமே 2014 டிசெம்பர் 31 வரை நிர்மாணிக்கப்பட்டிருந்தன. பொலி நெட் வீடுகளது வடிவமைப்பு தோல்வியுற்றமையே இதற்கான காரணமாகும்.

(எ) முதலாவது நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் 2005 முதல் 2008 வரையான காலப்பகுதியின்போது 237 குவிமுனைக் கிராமங்களில் சிறியளவிலான நிதித் திட்டங்களைச் செயற்திட்டம் அமுல்படுத்தியிருந்தது. இதன்பொருட்டு 8,935

நலன்பெறுநர்களுக்கு உப கடனாக ரூபா 183 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2014 செப்டம்பர் மாதம் தொடக்கம் நிலுவையாக இருக்கும் உப கடன் மீதிகள் தொடர்பாக தகவல்களை செயற்திட்டம் நாளது வரையாக்காமையால் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உபகடன் மீதிகளது நிலுவை விபரங்களைக் கணக்காய்விற்கு வழங்கமுடியாது போயிற்று. மேலும், 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைய இருந்தமையால், தொடர்புடைய மாகாண செயலாளர்களுடன் தேவையான தகவல்களைச் செயற்திட்டத்தால் தொடர்படுத்த முடியாது போயிற்று. சிறியளவிலான நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உப கடன்களைக் கண்காணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கணனி மென் பொருளும் தொடர்புடைய மாகாணச் செயலகங்களுக்குக் கையளிக்கப்படவில்லை. இதன் விளைவாக, உப கடன்களை அறவிடுதல் மற்றும் சிறியளவிலான நிதித் திட்டத்தினது நிலைத்து நிற்கக்கூடிய செயற்பாட்டிற்கான நிதிச் சுழற்சிக்கான சாத்தியக்கூறும் கணக்காய்வில் ஐயத்துக்கிடமாயின.

(ii) பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர் அலுவலகங்களில் இருந்த ரூபா 12.2 மில்லியன் காசு மீதியும் 9 மாவட்டங்களில் வங்கிகளில் இருந்த ரூபா 219.1 மில்லியன் மீதியும் 2014 செப்டம்பர் 30 இல் அவ்வாறே இருந்தன.

(iii) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்திட்டமானது நலன்பெறுநர்கள் பெற்றுக்கொண்ட உப கடன்களை அவர்கள் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தினரா எனக் கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவுமில்லை என்பதும் உப கடன்கள் இதன் நிமித்தம் தவறாகப் பயன்படுத்தக்கூடியவாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன என்பதும் அவதானிக்கப்பட்டது.

(iv) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார்கூற்றுக்களில் 20 சதவீதத்திற்கும் அதிகமான நட்டக் ஐயக்கடன் ஏற்பாடு வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உப கடன்களைப் பெற்றுக்கொண்ட நலன்பெறுநர்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தலின்படி, பொலிநெட் வீடுகளைச் சுவீகரிப்பதற்குப் பொருத்தமானவொரு வழங்குநரைத் தெரிவு செய்வதற்குக் கேள்வி நடைமுறைகளைப் மாவட்ட மட்டத்தில் உள்ள பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர் பின்பற்றவேண்டும். இத்துறையில் ஆற்றலும் பழைய அனுபவங்களும் உள்ளதா என்பதைக் கருத்திற் கொள்ளாது சகல 10

மாவட்டங்களுக்குமான 428 பொலிநெட் வீடுகளை வழங்கி அவற்றை நிறுவுவதற்குத் தனியார் கம்பனி ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், பல்வேறு பொலிநெட் வீடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஜீஐ குழாய்களும் ஏனைய துணைப்பொருட்களினதும் எண்ணிக்கை தேவைக்குக் குறைவாக இருந்தமையால், குறித்த விவசாயிகளுக்குக் கையளிக்கப்பட்ட 300 பொலிநெட் வீடுகளின் பொருட்டு வழங்குநருக்கு ரூபா 3.28 மில்லியன் கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது மேலும் 1,200 வளைந்த வடிவிலான பொலிநெட் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை வழங்கியிருந்தது. இது தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினாலும் கொள்வனவுக் குழுவினாலும் வளைந்த வடிவிலான பொலிநெட் வீடுகளது கொள்வனவுகளுக்கான வடிவமைப்பு அங்கீகரிக்கப்படவில்லை என அவதனிக்கப்பட்டது. இதன் விளைவாக, வேலை மாற்றம் மற்றும் விலை அதிகரிப்பு ஆகியவற்றால் செயற்திட்டமானது ரூபா 22 மில்லியனைக் கொடுப்பனவு செய்திருந்தது.

(ii) ஒப்பந்தகாரருடனான உடன்படிக்கையின் பிரகாரம், மத்திய மாகாணத்தில் வளைந்த வடிவிலான பொலிநெட் வீடுகளை வழங்கி அவற்றை நிறுவுவதற்கென ஒவ்வொன்றிற்கும் ரூபா 155,595 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முறையே மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்கில் நிறுவப்பட்ட ஒவ்வொரு பொலிநெட் வீட்டிற்கும் ரூபா 318,180 மற்றும் ரூபா 159,694 எனும் வீதப்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மத்திய மாகாணத்தில் நிறுவப்பட்ட 73 பொலிநெட் வீடுகளுக்கும் ரூபா 242,451 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பழுதானவற்றிகான பொறுப்பைத் தீர்த்து வைக்கும் காலப்பகுதியின்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வளைந்த வடிவிலான பொலிநெட் வீடுகளைப் பழுதுபார்த்தற்கென இன்னுமொரு கம்பனிக்கு ரூப 1,761,020 வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) உனகட்டு ஓயா அணைக்கட்டு நிர்மாண வேலைக்கெனத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி, கியர் பெட்டியுடன் நீரைக் கட்டுப்படுத்தும் கதவு ஒன்றையும் வழங்கி அவற்றைப் பொருத்துவதற்கென ரூபா 604,539 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்டு, பொருத்தப்பட்ட 6 கியர் பெட்டிகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 244,200 வீதம் மேலதிகமாக ரூபா 1,465,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட வரைபடங்களில் சுட்டிக்காட்டப்பட்ட கதவுகளின் அளவு சிறிதாக இருந்ததால் பெரப்பன்கடு அணைக்கட்டுக்கு வழங்கப்பட்டு, பொருத்தப்பட்ட நீர்க்கட்டுப்பாட்டுக் கதவுகளுக்கு 11 இறப்பரினாலான நீர் அடைப்புகளைப் பொருத்தும் மேலதிக வேலைகளுக்குச் செயற்திட்டம் செலவழித்த தொகை ரூபா 623,876 ஆகும்.

(உ) நிந்தவூரில் உள்ள அல்ஹுதா வீதியின் ஒரு பக்கத்தே நிர்மாணிக்கப்பட்ட வடிகாலின் மீது பொருத்துவதற்கு 150 மேலுறைகளை வழங்கி அவற்றைப் பொருத்துவதற்கு ரூபா 667,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், வழங்கப்பட்டு, பொருத்தப்பட்ட மேலுறைகள் 130 மாத்திரமே ஆகும். இதன் காரணமாக, ரூபா 112,120 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வடிகாலின் சுவரினது உயரம் பல இடங்களில் குறைக்கப்பட்டும் 1.68 சதுர மீட்டரால் மேலுறைகளின் அளவு குறைக்கப்பட்டும் இருந்ததால், 51.3 சதுர மீட்டர் கொங்கிரீட் தளத்தைப் பதிப்பதற்கு மொத்தமாக ரூபா 24,360 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஜூன் 03 ஆந் திகதியன்று ரூபா 9.54 மொத்தக் கிரயத்தில் 3 ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்களைச் செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தது. இவற்றுள் 2 அறுவடை இயந்திரங்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. குறித்த அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தைப் பெறுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக 3 அறுவடை இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான 3 கூறு விலைகள் கோரப்பட்டபோதும், அறுவடை இயந்திரங்களுக்கான கொடுப்பனவு ஒரேயொரு கொடுப்பனவு உறுதிச் சான்றின் மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. வழங்கல் திகதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் கட்டணமின்றி பழுதுபார்த்தல்களைச் செய்வதற்குத் வழங்குநர் உடன்பட்டபோதும், உத்தரவாத காலத்தின் போது அறுவடை இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கு கிராம அபிவிருத்தி நிறுவனங்கள் தாமே செலவினை மேற்கொண்டிருந்தன.

(ஆ) குளம் அமைந்துள்ள இடத்தில் அனுமதியின்றி மண் அகழ்வில் ஈடுபட்டமைக்காக வன பரிபாலன பாதுகாப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள மஹ ஓயாவின் ஜயவெ குளப் புனரமைப்பில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரருக்கு எதிராக வனபரிபாலனத் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

(இ) வீதியின் மேற்பரப்பு குண்டும் குழியுமாகக் காட்சியளிப்பதால், புனரமைப்பு வேலையின் பின்னர் ரூபா 22,258,620 கிரயத்தில் புனரமைக்கப்பட்ட பபுரன – சுங்காவில வீதியை லல்காபுர பிரதேச சபை பொறுப்பேற்கவில்லை என 2014 மார்ச் 17 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனை புலப்படுத்தியது.